210—

திருக்கோயிலைப் புதுப்பித்தல்

***50932—திரு. G. அசோகன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகாசி மாநகராட்சி, அருள்மிகு விஸ்வநாதசுவாமி திருக்கோயிலைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 11–35

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விஸ்வநாதசுவாமி திருக்கோயிலில் 6–6–2011 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றது. ஆகம விதிப்படி, 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தற்போது 13 பணிகள் ரூ.112 இலட்சத்து 40 ஆயிரம் செலவிலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தை மாதம் குடமுழுக்கு நடைபெற இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அந்த குடமுழுக்கிலே பங்கேற்று, நம்முடைய ஈஸ்வரனுடைய அருளைப் பெறுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன் அவர்கள்.*

திரு. G. அசோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருக்கோயில் திருப்பணிக்கு அனுமதி வழங்கியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிவபக்தர்களின் நன்கொடைகள் மூலமாக பணிகள் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கும்பாபிஷேகத்திற்கு நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. உதயநிதி ஐயா அவர்களும் கலந்துகொண்டு, நல்லபடியாக நடத்தி வைத்தால் பெருமையாக இருக்குமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

[2023 அக்டோபர் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களின் கோரிக்கையையேற்று, நிச்சயமாக குடமுழுக்கு நன்னீராட்டு விழாவிலே நானும், சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களும் கலந்துகொள்வோம் என்ற உறுதியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன் அவர்கள்.*

திரு. G. அசோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிவகாசியில் இரண்டு குறுக்கு இரயில்வே பாலங்கள் உள்ளன. ஒன்று திருத்தங்கலிலும் மற்றொன்று ஸ்ரீவில்லிபுத்தூர் சாலையிலும் உள்ளன. ஸ்ரீவில்லிபுத்தூர் சாலையில் உள்ள எண் 427-ன் மேம்பாலப் பணியை வேகமாக முடிக்க வேண்டும். ஏனென்றால் அது கல்லூரி அமைந்த சாலையாக உள்ளதால் வேகமாக அந்தப் பணியை முடித்துக் கொடுக்க வேண்டுமென்று இந்தத் தருணத்தில் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாதது. இதுகுறித்து, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தனிக் கேள்வியாக எழுதிக் கொடுங்கள். நடவடிக்கை எடுப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி. (குறுக்கீடு) மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியை ஆண்டு கொண்டிருக்கின்ற ஆண்டவனிடத்தில் ஒப்படைக்கின்றோம். நிச்சயமாக அவர் நிறைவேற்றித் தருவார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள்.*

2023 அக்டோபர் 9]

திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மானாமதுரை தொகுதி, இளையான்குடி பகுதியில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோயிலில் உட்பிரகார மண்டபம் ஒன்று அமைக்க வேண்டும். அதற்கு மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதையெல்லாம் தருகின்ற இந்த அரசு, நிச்சயம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, விரைவாக நடவடிக்கை எடுத்து, அந்த மண்டபம் கட்டித் தருவதற்குண்டான தீவிரமான பணிகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம் என்னுடைய சொந்தக் கிராமமான புலியூரில், நூறாண்டுகளைக் கடந்த முருகன் கோயிலைப் புதியதாகக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

45 ஆண்டுக் காலத்திற்கு மேலாக, சுமார் 500 கோடி ரூபாய் மதிப்புள்ள இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்குச் சொந்தமான கோயில் நிலத்தைத் தனி நபர் ஒருவர் குத்தகை என்ற பெயரில் ஆக்கிரமித்து அனுபவித்து வைத்திருந்தார். பல ஆண்டுகளாக, பல முயற்சிகளை நான் மேற்கொண்டபோதும், அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாமல் இருந்தன. இதனை நான் இந்த அவையில் கவன ஈர்ப்பு அறிவிப்புமூலம் மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின்

ஆட்சியில் சட்டத்தின் துணைக் கொண்டு, யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தாலும், அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்குச் சொந்தமாக்குவோம் என்று கடந்த கூட்டத் தொடரில் அறிவித்தார்கள். தற்போது ரூ.100 கோடி பெருமானமுள்ள இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்குச் சொந்தமான சொத்துகளை மீட்டெடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மொத்தம் ஆறரை ஏக்கரில், பேருந்து நிலையம் அருகில், பிரதான காலியிடம் இரண்டரை ஏக்கர் நிலம் மீட்கப்பட்டிருக்கிறது. ரூ.300 கோடி மதிப்புள்ள மீதமுள்ள சொத்துகளையும் மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். இதுவரை எடுத்த நடவடிக்கைக்குத் தங்கள் துறைக்கும், ஒத்துழைப்பு தந்த வருவாய்த் துறை மற்றும் காவல் துறைக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–40

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே கருத்து குருடர்களாக இருக்கும் பலர், இந்த ஆட்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை, ஆக்கிரமிப்புகளிலிருந்து மீட்டெடுத்த சொத்துகளின் முழு விவரம் தெரியாமல் கூறிக்கொண்டிருக்கின்ற இந்தக் காலக்கட்டத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, ரூ.5,330 கோடி அளவிற்கு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, திருக்கோயில்களைத் தனியாரிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கின்ற ஒரு பகுதியைச் சார்ந்தவர்களிடமிருந்து மாத்திரம் 9 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, 700 கோடி ரூபாய் அளவிற்கு இந்த ஆட்சியில் சொத்துகள் மீட்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள் கடந்த ஆண்டு வைத்த கோரிக்கையை நிறைவேற்றியிருக்கின்றோம். இப்போது

2023 அக்டோபர் 9]

வைத்திருக்கின்ற கோரிக்கையை இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உதவியோடு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நம்முடைய உறுப்பினர் திரு. G. அசோகன் அவர்கள், எங்களுடைய மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், போற்றுதலுக்குரிய அருமை அண்ணன் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குடமுழுக்குத் திருவிழாவிற்கு வர வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். ஏற்கெனவே அவர் தொகுதியில் பார்த்தசாரதி திருக்கோயிலில் நடைபெறுகின்ற அனைத்து திருக்கோயில் விஷேசங்களிலும் கலந்துகொண்டிருக்கிறார். ஆகவே, இந்து மதம் எங்களுக்கு எதிர்ப்பான மதம் அல்ல. நாங்கள் ஆதரிக்கின்ற அரவணைக்கின்ற மதம். ஆத்திகர்களை, நாத்திகர்களை ஒன்றாக அரவணைத்துச் செல்லுகின்ற இயக்கம் இந்த இயக்கம். நிச்சயமாக குடமுழுக்கு நந்நாளில் நன்னீராட்டு விழாவிலே எங்களுடைய இளைஞரணிச் செயலாளர் அருமை அண்ணன் திரு. உதயநிதி அவர்கள் பங்கேற்பார்கள் என்பதை நம்முடைய உறுப்பினர் திரு. G. அசோகன் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.*

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். சமீபத்தில் சேலம் சுகவனேஸ்வரர் திருக்கோயிலுக்கு அருமையான குடமுழுக்குப் பெருவிழா நடைபெற்றது. இம்மாதம் 26 ஆம் தேதி சேலம் அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு செய்வதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குடமுழுக்கு விழாவில் தமிழிலே அர்ச்சனை செய்ய வேண்டும். சேலம் மாவட்டத்தில் மட்டுமல்ல; தமிழகம் முழுவதும் உள்ள மாரியம்மன் சாமி நம்ம ஊர் சாமி; அந்த மாரியம்மன் திருக்கோயில் குடமுழுக்குத் திருவிழா தமிழிலே நடத்தப்படுமா என்பதைத் தாங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியைப் பொறுத்தளவில், எங்கும் தமிழ், எதிலும் தமிழ். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, அண்மையிலே பழனி திருக்கோயிலில் நடைபெற்ற குடமுழுக்கு நன்னீராட்டு விழாவிலேகூட, தமிழிலேதான் அர்ச்சனை செய்யப்பட்டது. திருக்கோயில்களிலே அன்னை தமிழில் வழிபாடு என்ற ஒரு புதிய முயற்சியை மேற்கொண்டு, 48 முதுநிலை கோயில்களில் இப்போது அன்னை தமிழில் அர்ச்சனை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. படிப்படியாக, அனைத்துக் கோயில்களிலும் அன்னை தமிழில் அர்ச்சனை கொண்டு வரப்படும். அர்ச்சகர்களை ஊக்குவிக்கின்றவண்ணம், அர்ச்சனைக் கட்டணத்தில் 60 சதவிகிதம் அர்ச்சகர்களுக்கே வழங்கப்படுகிறது. நம்முடைய உறுப்பினர் அருள் அவர்கள் கோரிக்கை வைத்த, கோட்டை மாரியம்மன் திருக்கோயிலில் 2014 ஆம் ஆண்டு குடமுழுக்குத் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டது. கிட்டத்தட்ட இந்த ஆட்சி வந்தபிறகுதான் இந்த இரண்டு ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, 3 முறை அந்தத் திருக்கோயிலுக்குச் சென்று ஆய்வு செய்தேன். வருகின்ற 27 ஆம் தேதி அன்று காலை நன்னீராட்டு விழாவும், மாலை திருத்தேர் பவனியும் நடைபெறவிருக்கின்றது. நிச்சயமாக அன்னை தமிழில் கும்பாபிஷேகம் நடத்தப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான், திருக்கோயில்களின் வரலாற்றில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டுள்ளது. இந்து சமய அறநிலையத் துறையின் வரலாற்றில் இல்லாத அளவிற்கு 1077 கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தியுள்ள ஓர் ஆட்சி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சி என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]